சென்னை –15, சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : முனைவர் இரா.இராமன்,எம்.ஏ.,பி.எச்டி.,

ந.க.எண். 1838/அ1/2023 நாள். 07.06.2024

பொருள்: தமிழ்நாடு – கல்லூரிக் கல்வித் துறை – சென்னை–15, சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் – திரு.சி.கோபி , இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்– பணியினை வரன்முறைபடுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண்.21801/பி2/2022 நாள் 23.032023.
2. இவ்வலுவலக கடித செயல்முறைகள் ந.க எண் 1838/அ1/2023, நாள் 27.03.2023.
3. அரசு கடித எண். 1535/ஜி2/2023–1 நாள். 30.10.2023
4. சென்னை–15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1058/பி1/2023 நாள். 06.12.2023

••••••

பார்வை 1ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி சென்னை–04, இராணி மேரி கல்லூரியில் குறியீட்டாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் பொழுது இயற்கை எய்திய திரு.எஸ்.சிங்காரவேலு என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.சி.கோபி, என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு பணி நியமனம் செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி மருத்துவ உடற்தகுதி சான்றினை முன்னிலைப்படுத்தி 27.03.2023 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை–4ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், பார்வை–3ல் காணும் அரசு கடிதம் மற்றும் பார்வை–3ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட, தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் 2023–ன் விதி 16ன்படி, கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் தங்களது அளவிலேயே பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி–10ன் படி இளநிலை உதவியாளர், தட்டச்சர் பதவிக்கு நியமன அலுவலர் சார்ந்த இணை இயக்குநரே ஆவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பிறந்த தேதி 04.07.1996 என்றும் பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளார். அரசுத் தேர்வுகள் இயக்ககத்திலிருந்து பத்தாம் வகுப்பு சான்றிதழ் உண்மைத் தன்மை பெறப்பட்டுள்ளது மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை

எழவில்லை. எனவே, திரு.சி.கோபி, என்பார் இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான **27.03.2023** முதல் அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
சென்னை மண்டலம், சென்னை–15.

பெறுநர்
திரு.சி.கோபி,
இளநிலை உதவியாளர்,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்,
சென்னை மண்டலம்,சென்னை–15.

நகல்

1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகிறது.
2. உபரி–1